TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8051890

1. District : மாவட்டம் Tiruvannamalai PS: காவல்நிலையம் V&AC Year: ஆண்டு 2023 FIR No.: மு.த.அ. எண் 01/2023 Date: நாள் 20.02.2023

2. (i) Act சட்டம்: The Prevention of Corruption Act 1988 as amended by The PC (Amendment) Act 2018. Sections பிரிவுகள்: 7
(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் 10.02.2023 Date to : நாள் வரை 18.02.2023
Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 20.02.2023 Time : நேரம் 1300 Hrs
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Vol - I Time : நேரம் 1400 Hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Computer Typed

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் 1 Kms North
Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி TNEB office, TANGEDCO, Tiruvannamalai.
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் Tr.R.Varadhan (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் S/o.Ramasamy
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு Age-47 (d) Nationality : நாட்டினம் Indian (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation தொழில் Hotel Supplier (g) Address : முகவரி Thendral Nagar 2nd Street, Tiruvannamalai Town & Taluk, Tiruvannamalai District.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

Tr.Renu, Foreman , TNEB Department, Tiruvannamalai.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம் ------

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)
------

10. Total value of properties stolen / involved : ------
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் ------

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து அனுப்பப்படுகிறது. திருவண்ணாமலை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளராகிய நான் 20.02.2023 ஆம் தேதி பிற்பகல் 13.00 மணியளவில் அலுவலகத்தில் ஆஜரில் இருந்த போது திருவண்ணாமலை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் துணை கண்காணிப்பாளர் அவர்களின் மேல் வரைவுடன் தட்டச்சு மூலம் கிடைக்கபெற்ற புகார் மனு பின்வருமாறு: விடுநர் R.வரதன், வயது-47, த/பெ.ராமசாமி, தென்றல் நகர் 2வது தெரு, வேங்கிக்கால், திருவண்ணாமலை. செல்:9962934594. பெறுநர் காவல் துணை கண்காணிப்பாளர் அவர்கள், திருவண்ணாமலை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, திருவண்ணாமலை. ஐயா, நான் கடந்த 2010-ல் எனது அக்கா உண்ணாமலையின்

-இதன் தொடர்ச்சி தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

R.வரதன்

[signature] 20.02.2023

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
20.02.2023 at 15.30 hrs.

Name: பெயர் G. MYTHILY
Rank: நிலை Inspector of Police No. எண் .........
VSAC, Tiruvannamalai

மகள் சுதாவை திருமணம் செய்து கொண்டு எனது மச்சான் பழனி வீட்டில், தென்றல் நகரில் வசித்துவருகிறேன். நான் சென்னையில் ஒரு தனியார் ஓட்டலில் சப்ளையராக வேலை செய்து வருகிறேன். நான் கடந்த 2022 ல் மேலத்திக்கான் கிராம அருணாச்சலம் நகரில் பட்டா எண் 1676, சர்வே எண்.70/81-ல் 20x60 அடி நீள அகலமுள்ள 1200 சதுர அடி காலி மனையை எனது மனைவி V.சுதா பெயரில் வாங்கியுள்ளேன். நான் மேற்படி காலிமனையில் வீடு கட்ட வேண்டி அதற்கு டெம்ப்ரவரி EB சர்வீஸ் வாங்குவதற்காக விண்ணப்பித்தேன். அதற்கான இணைப்புத்தொகை பீஸ் ரூ.5086/- ஐ ஆன்லைனில் 30.01.2023 அன்று பணம் செலுத்திவிட்டேன். அதன் பின்னர் 10.02.2023 அன்று டெம்ப்ரவரி EB சர்வீஸ் எண். 3010051464 ன் படி மின்வாரிய போர்மேன் திரு.ரேணு என்பவர் மீட்டர் பொருத்தினார். தன் பின்னர் மின் மீட்டர் பொருத்தியதற்கு லஞ்சமாக ரூ.5,000/-ஐ அங்கிருந்த எனது மச்சான் பழனியிடம் உனது மாமா வரதனிடம் சொல்லி பணத்தை வாங்கித்தருமாறு ரகசியமாக கூறியுள்ளார். பின்னர் எனது மச்சான் என்னிடம் தகவலை கூறினார். எனவே நான் போர்மேன் ரேணு என்பவருக்கு அன்று மாலையே எனது செல்போன் எண்.9962934594 ல் இருந்து ரேணு அவர்களின் செல்போன் எண்.8072123636 க்கு தொடர்பு கொண்டு அவரிடம் சார், நானே ஓட்டலில் சப்ளையராக வேலை செய்து பிழைப்பு நடத்தி வருகிறேன். அவ்வளவு பணம் என்னால் கொடுக்க முடியாது என கூறினேன். அதற்கு அவர் என்னிடம் ஓட்டலில் வேலை செய்பவன் எதற்கு வீடு கட்டுகிறாய் என திட்டிவிட்டு என்னை நேரில் வந்து பார் என்றார். அதற்கு நான் வாராவாரம் சனி மற்றும் ஞாயிறு கிழமைகளில் தான் ஊருக்கு வருவேன் என்று கூறினேன். அதற்கு அவர் சனிக்கிழமை வந்து என்னை நேரில் பார் என்று கூறிவிட்டு போனை துண்டித்துவிட்டார். நான் 18.02.2023 சனிக்கிழமையன்று ஊருக்கு வந்து போர்மேன் திரு.ரேணு அவர்களை பார்ப்பதற்கு மின்சார அலுவலகத்திற்கு சென்றேன். அப்போது போர்மேன் திரு.ரேணு அங்கு இல்லாததால் அவரது செல்போன் நெம்பர் 8072123636 - க்கு தொடர்பு கொண்டு அவரிடம் பேசினேன். அப்போது அவர் லஞ்சமாக ரூ.5,000/- பணம் கொடுத்தே ஆகவேண்டும் என்றும் இப்போதைக்கு டெம்ப்ரவரி கனெக்ஷன் மட்டும் தான் வாங்கியிருக்க, பர்மெனெண்ட் கனெக்ஷன் வாங்கவும் என் கிட்ட தான் வந்தாகனும், நீ பணம் கொடுக்கலனா எப்படி பர்மனெண்ட் கனெக்ஷன் வாங்குறன்னு பாக்கிறேன் என்று கூறினார். எனக்கு பர்மனெண்ட் கனெக்ஷன் வாங்கியே ஆகவேண்டும் என்ற காரணத்தால் நான் சரியென்று சொல்லிவிட்டு, அவரிடம் எப்போது வரட்டும் என்று கேட்டேன். அதற்கு அவர் திங்கள்கிழமை அவருடைய அலுவலகத்திலோ அல்லது நான் வீடுகட்டும் இடத்திற்கோ வந்து வாங்கிக்கொள்கிறேன் என்று கூறினார். அப்படி இல்லையென்றால் நான் கூறும் நபரிடம் கொடுத்துவிடு என்றும் கூறினார்.

எனவே தற்காலிக மின் இணைப்பு வழங்கியதற்காக லஞ்சமாக ரூ.5,000/- கேட்ட மின்சார வாரிய போர்மேன் திரு.ரேணு என்பவருக்கு லஞ்சம் கொடுக்க எனக்கு விருப்பமில்லாததால், என்னிடம் ரூ.5,000/-ஐ லஞ்சமாக கேட்ட திருவண்ணாமலை மின்சார வாரிய போர்மேன் திரு.ரேணு என்பவர் மீது உரிய நடவடிக்கை எடுக்கவேண்டி, புகார் மனுவை தட்டச்சு செய்து இன்று 20.02.2023-ந் தேதி திருவண்ணாமலை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் துணை கண்காணிப்பாளர் அலுவலகத்திற்கு வந்து புகார் மனு அளிக்கிறேன். நடவடிக்கை எடுக்குமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு R.வரதன் (SdXXXXXX)

Inspector Tmt.G.Mythily

Please receive the complaint discreetly verify the antecedents of the accused and register a case and take up for investigation. Sd/-XXXXX 20.02.2023 (S.Velmurugan), DSP, V&AC, TVM.

Sir,

Received the complaint on 20.02.2023 at 13.00 hrs and a discreet enquiry was made on the general reputation of the accused officer and it is learnt to be bad. The motives, reliability and the antecedents of the informant was also verified and found nothing adverse. Since the information contained in this complaint discloses a cognizable offence, today on 20.02.2023 at 14.00 hrs a case was registered in Tiruvannamalai V&AC Cr.No.01/2023 u/s 7 of the Prevention of Corruption Act 1988 as amended by the PC (Amendment) Act 2018. (Sd/-XXXXX) 20.02.2023. G.Mythily Inspector of Police, V&AC, Tiruvannamalai. The FIR in original along with the complaint was sent to the Hon'ble Special Judge Cum CJM, Tiruvannamalai and sent the copies to the officers concerned.

20.2.2023

(G.MYTHILY)
Inspector of Police
V&AC, TVM.